செ. கு. எண்: 057 நாள் : 01.08.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 1.8.2015

சென்னை, வியாசர்பாடி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையத்தில் நிலைய அலுவலராகப் பணி புரிந்த வந்த திரு. S.தணிகைநாதன் அவர்கள் 5.5.2015 அன்று காஞ்சிபுரம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், சிறுவர் நல காவல் பிரிவு 1, கெல்லீஸில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. C.ஞானராஜ் அவர்கள் 6.5.2015 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், யானைகவுனி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.ரவிகுமார் அவர்கள் 16.5.2015 அன்று வியாசர்பாடி அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாநகரம், மேலப்பாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.சின்னத்துரை அவர்கள் 27.5.2015 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.சந்திரசேகரன் அவர்கள் 27.5.2015 அன்று வெங்கம்பாக்கம் - சட்ராஸ் சாலை அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது நிலை தடுமாறி கீழே விழுந்ததில் பலத்த காயம் அடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.வேலாயுதம் அவர்கள் 30.5.2015 அன்று வெள்ளாங்குழி அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது நிலை தடுமாறி கீழே விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாநகர நவீன காவல் கட்டுப்பாட்டு அறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. முருகேசன் அவர்கள் 31.5.2015 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், மோரணம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்தி திரு. சிவகுமார் அவர்கள் 31.5.2015 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சேலம் மாநகரம், இரும்பாலை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. தவமணிராஜா அவர்கள் 7.5.2015 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் சித்தனூர் அருகே சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 31.5.2015 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், கோட்டை காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. J.தணிகாச்சலம் அவர்கள் 1.6.2015 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர்கள் ரவிகுமார், வேலாயுதம், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ஞானராஜ், சின்னத்துரை, சந்திரசேகரன், முருகேசன், தணிகாச்சலம், தலைமைக் காவலர்கள் தவமணிராஜா, முதல் நிலைக் காவலர் சிவகுமார், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலைய அலுவலர் தணிகைநாதன், ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்கள் மற்றும் நிலைய அலுவலர் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**